8th August 1966]

எண்ணிக்கை மிகக் குறைவாகவும் இருப்பது தெரியும். இலங்கை யில் இருந்து வந்திருக்கக்கூடியவர்களுக்கு வேலை அளிப்பதில் வயது வரம்புச் சலுகை அளிக்கப்படுகிறதா, கல்வி வரம்புச் சலுகை அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சலுகை இருக்கிறது. என்ன, என்ன இருக்கிறது என்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி வேண்டும்.

அரிஜன மாணவர்களுக்குப் பயிற்சி

* 71 கேள்வி.—திரு. வை. சங்கரன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வுகளுக்குச் செல்லும் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அதற்கான பாடங்களைக் கற்பிக்கக் கல்வி நிலையங்களைத் தொடங்கும் திட்டம் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) சபை முன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன்: பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரிட்சைக்குப் பயிற்சி அளிப்பதற்காக 30 பேர்களுக்குச் சென்னையிலும், திருச்சி யிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்த முப்பது பேர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார் கள்? இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குப் போதசிரியர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்?

கனம் திரு. பூ. கக்கன்: இரண்டாவது கிரேட், மூன்றாவது கிரேடுக்கு யார் யார் தகுதி பெற்றிருக்கிறார்களோ அவர்கள் அப்ளை செய்து கொள்ளவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி: பின் தங்கிய வகுப்பு மாணவர் களுக்கும் இந்தப் பயிற்சி அளிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: தற்சமயம் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் இவர்களுக்குப் பயிற்சி அளிப்பது தான் திட்டம்.

* 211 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Madras Government have submitted any scheme to the Union Government to set up a pre-examination centre in the State to train Scheduled Castes and Scheduled Tribes candidates for recruitment to the Indian Administrative and Police Services; and

(b) if so, the details thereof?

---

[a] Printed as Appendix II on pages 876–878.